
உ
சிவமயம்



ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள்
இயற்றிய

# நித்திய கருமவிதி
# சைவ அநுட்டானவிதி
# விளக்கம்

வெளியிடுவோர்:
சிவதர்மவள்ளல், சமாதான நீதவான்
க. கனகராசா அவர்கள்
(மில்க்வைற் தொழிலதிபர்)
திருஆலவாய்,
யாழ்ப்பாணம்.
1983



தொண்டை மண்டல
ஞானப்பிரகாச பரமாசாரிய சுவாமிகளிடம்
தீட்சை உபதேசம் வாழ்த்து பெற்ற
மில்க்வைற் தொழிலதிபர்.

உ
சிவமயம்

# நித்திய கருமவிதி
# சைவ அநுட்டானவிதி

கமலை ஞானப்பிரகாசதேசிக சுவாமிகள்
ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள்
பழநி ஈசானசிவாசாரிய சுவாமிகள்
தேவகோட்டை தற்புருஷதேசிகர் அவர்கள்
திருச்சிறுப்பள்ளி பட்டுசுவாமி ஓதுவார் அவர்கள்

**( இவர்கள் செய்த விளக்கச் சுருக்கம் )**

தொகுத்தவர்:
க. சி. குலரத்தினம்

★

வெளியிடுவோர்:
சிவதர்ம வள்ளல், சமாதான நீதவான்
**க. கனகராசா அவர்கள்**
( மில்க்வைற் தொழிலதிபர் )
திருஆலவாய்,
யாழ்ப்பாணம்.

1983

உ

சிவமயம்

# அநுட்டானத்தின் அவசியம்

''இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்'' என்பது ஆறுமுகநாவலர் வாக்கு. சைவசமய மரபிலே பிறந்தவர்கள் எல்லோரும் ஏழாம் வயசிலாவது, ஒன்பதாம் வயசிலாவது, சமய தீட்சை என்னும் சிவ தீட்சை பெற்று, அன்று தொடக்கம் அநுட்டானம் செய்துவருதல் வேண்டும் என்பர்.

அநுட்டானத்தால் தேகசுகம், புனிதம், தீர்க்காயுள், சுறுசுறுப்பு, நோயின்மை, மகிழ்ச்சி முதலிய நன்மைகள் உண்டாகும். ஸ்நானம் செய்தபின் சுத்த சலம் கொண்டு அநுட்டானம் பண்ணி, பஞ்சாட்சர செபம் செய்து, தோத்திரம் பண்ணல் வேண்டும் என்பர்.

அநுட்டானம் என்பது ஆசாரம், ஒழுக்கம் எனப் பொருள்தரும். சைவசமயத்தவரின் அநுட்டானம் சைவாசாரம் எனப் பெயர்பெற்றது. அநுட்டானம் சைவ ஒழுக்கத்தின் அடிப்படை.

உமாபதி சிவாசாரியார் சைவாசாரத்தை ஒழுங்கு செய்துள்ளார். அவரின் பின்வந்த தத்துவப்பிரகாசர் தமது தத்துவப் பிரகாசம் என்னும் நூலில் அநுட்டானத்தைச் சரியையிற் சரியை எனப் புகழ்ந்து கூறியுள்ளார்.

கமலைஞானப்பிரகாசர் சைவானுட்டான அகவல் என்னும் நூல் செய்துள்ளார். அதற்கு அச்சுவேலி குமாரசுவாமிக் குருக்கள் அருமையான உரை எழுதியுள்ளார். இன்னும் பழநி வேதசிவாகம பாடசாலை ஈசானசிவாசாரியர், தேவகோட்டை தற்புருஷதேசிகர், திருச்சி பட்டுசாமி ஓதுவார்

முதலான பெரியவர்கள் அநுட்டான விதிகளுக்கு விளக்கம் எழுதியுள்ளார்கள். அவை இந்நூலில் ஆங்காங்கே இடம் பெறுகின்றன.

## சைவானுட்டானம் செய்தல்

சிவதீட்சை பெற்றவர்களே சைவ அனுட்டானஞ் செய்வதற்குத் தகுதி பெற்றவராவர். சைவானுட்டானத்தின் போது மனம், வாக்கு, காயம் ஆகிய முக்கரணங்களும் ஒன்றுபடுதல் அவசியம். சைவானுட்டானம் என்பது பாவனை, மந்திரம், கிரியை என முத்திறப்பட்டு, முக்கரணங்களாலும் செய்யப் பெறுவதாகும். பாவனையின்றி மந்திரங்களும் கிரியைகளும் பயன்தரமாட்டா. கிரியைகள் முத்திரைகளை அடிப்படையாகக் கொண்டவை. முத்திரைகள் என்றால் கைவிரல்களை வளைத்தும் நிமிர்த்தியும் சில குறிப்புகளை உணர்த்துதலாம்.

சைவ அனுட்டானத்தால் ஆசாரம் ஒழுக்கம் தாமே வந்தடையும். வாழ்க்கை புனிதமாகும். நாம் ஆன்ம ஈடேற்றத்தின் பொருட்டுச் செய்யவேண்டிய சம்ஸ்காரங்கள் என்னும் நற்கருமங்களுள், தீட்சைபெறுதல், நித்திய அநுட்டானஞ் செய்தல், சிவாலய தரிசனஞ் செய்தல், திருமுறை ஓதுதல், திருவைந்தெழுத்து என்னும் பஞ்சாட்சர செபஞ் செய்தல் முதலியன மிகவும் முக்கியமானவையாகும். இவை சிவ புண்ணியச் செயல்கள். சைவ நெறிக்குரிய ஒழுக்கங்கள்.

## ஆன்ம ஈடேற்றம்

சைவராகப் பிறப்பதற்குப் பெருந் தவம் செய்ய வேண்டும் என்பர். சைவசமயத்திற் பிறந்தவர்களுக்குச் சிவபெருமான் அருளிய முதல் நூல்கள் வேதம், சிவாகமம் என்னும் இரண்டுமாம். இவற்றுள் சிவாகமங்கள் சைவானுட்டானங்களைச் சிறப்பாகக் கூறுவன. சிவாகமங்கள் கூறுவனவற்றைப் பத்ததிகள் விளக்கிக் கூறுகின்றன. ஆகமக் கருத்துகளை எல்லோரும் விளங்கிக்கொள்ளுமாறு அறிவாளிகளாய சிவா

சாரியர்கள் பத்ததிகள் செய்துள்ளார்கள். அகோர சிவா சாரியர் செய்த பத்ததிகள் சைவ உலகில் புகழ் பெற் றுள்ளன.

சிவபெருமானை மெய்யன்போடு வழிபட்டுச் சித்தாந்த முத்தியாகிய பேரின்ப வீட்டை அடைய முற்படுதல் சைவப் பெருமக்களின் முக்கிய கடனாகும்.

## நாற்பாத நல்வழி

நிரம்பிய தவத்தினையுடையவர்கள் உணரும் வகையில் சிவபெருமான் அருளிச்செய்த சிவ சம்பந்தமான வழி ஆகம நெறி. சிவபெருமான் ஆகமமாகி நின்று அண்ணிப்பவர் என்று மாணிக்கவாசக சுவாமிகள் பாடியருளியுள்ளார். ஆகமம் சைவசமயத்தவருக்குரிய அருள் வழியைக் காட்டு வது. காரணாகமம் என்னும் சைவாகமத்தில், ''சிவம் சைவத்தை உண்டுபண்ணியது. சைவத்தால் சிவம் தோன்றி யது'' என்று கூறப்பெற்றுள்ளது. சிவம் சைவரூபத்தோடு சேர்ந்தது. சிவத்தை அடைவதற்குரிய வழி நாற்பாதங்கள் என வழங்கும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன வாகும்.

## நால்வழி ஒழுகத் தகுதி

சைவசமயத்தவருக்குரிய சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் வழியிற் செல்வதற்கு யோக்கியத்தைத் தருவது சமயதீட்சை என்னும் சிவதீட்சையாகும். சிவ தீட்சை பெற்றவரே சைவசமயத்தவர் என்னும் தகுதி பெற்றவராவர். தீட்சை பெற்றவரே சைவ அனுட்டானம் செய்யத் தகுதி பெற்றவராவர். தீட்சைபெற்றவரே தானம், தருமம், தத்தம், தவம் முதலிய சிவபுண்ணியச் செயல் களைச் செய்வதற்குத் தகுதி பெற்றவராவர். சிவத்தொண்டு செய்வதற்குச் சிவதீட்சை இன்றியமையாதது. பிறவிக் கடலைக் கடப்பதற்குத் தோணிபோன்றது தீட்சை என்று வாயு சங்கிதை என்னும் பெரிய நூல் கூறுகிறது;

## தீட்சை

தீட்சை என்பது தீ + க்ஷா எனப் பிரிந்து, கொடுப்பதும் கெடுப்பதும் எனப் பொருள் தரும். கொடுப்பது சிவஞானம். கெடுப்பது ஆணவம், கன்மம், மாயை என்னும் மலங்கள். மலங்களைக் கெடுத்து ஞானத்தைக் கொடுப்பது தீட்சை. அது சிவ சம்பந்தமானதால் சிவதீட்சை எனப் பெயர் பெற்றது.

சிவதீட்சை என்பது சமய தீட்சை, விசேட தீட்சை, நிர்வாண தீட்சை எனப் பலவகையாக உள்ளது. இவை ஓமத்துடன் கூடியவை. இவற்றுக்கு அங்கமாக நயன தீட்சை, பரிச தீட்சை, வாசக தீட்சை, மானத தீட்சை, சாத்திர தீட்சை, யோக தீட்சை எனப் பலவாக உள்ளன. இவை யாவும் பெறுபவர் பக்குவங்கண்டு கொடுக்கப் பெறுவன வாகும்.

சிவதீட்சையில் ஒரு பகுதி உபதேசம். இது மலபாவ தோஷங்களைப் போக்கி, அருளாகிய அநுக்கிரகத்தை அளிப் பது. இங்கே உபதேசிக்கப் பெறுவது, சிவமூல மந்திரமாகிய பஞ்சாட்சரம் என்னும் திருவைந்தெழுத்து. பஞ்சாக்கரத் தில் ''சிவ சிவ'' என்னும் இரண்டு எழுத்துக்கள் மிக மேலானவை. ''சிவசிவ என்றிடத் தீவினை மாளும்'' என்று திருமூலர் தமது திருமந்திரம் என்னும் திருமுறையில் அருளி யுள்ளார்.

## குருநாதன்

தீட்சை வைத்து மந்திர உபதேசம் செய்தவர் குரு நாதன். ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களை யுடைய சகலர் ஆகிய எமக்குச் சிவபெருமான் குருவடிவந் தாங்கி வந்து அருள்புரிவர். எனவே தீட்சா குருவைச் சிவ பெருமானாகவே கருதி உரிய முறையில் வணங்குதல் முறை யாகும். குருவே சிவமெனக் கூறினன் நந்தி என்று திருமூலர் அருளியுள்ளார்.

# கடவுள் வணக்கம்

## திருநாவுக்கரசுநாயனர் தேவாரம்

திருச்சிற்றம்பலம்

ஆதி யானை அமரர் தொழப்படும்
நீதி யானை நியம நெறிகளை
ஓதி யானை உணர்தற் கரியதோர்
சோதி யானைக்கண் டீர்தொழற் பாலதே.

திருச்சிற்றம்பலம்

## பூமிசுத்தி

''ஓம் அஸ்திராய பட்'' என்று தானிருக்கும் இடத்தையும் பாத்திரம் வைக்கும் இடத்தையும் நீர் கொண்டு தெளித்துப் பாத்திரத்தை வைக்கவும்.

## கணபதி வணக்கம்

குறை குற்றங்கள் இடையூறுகள் வராமற் காத்தருளுமாறு பிள்ளையாரை நினைந்து, ''ஓம் கணபதயே நம:'' என்று தலையிலே மூன்றுமுறை குட்டிக் கும்பிட்டுத் தியானிக்கவும்.

## குரு வணக்கம்

குரு அஞ்ஞானத்தை நீக்குபவர். ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களும் உள்ள சகலராய எமக்கு இறைவன் குருவடிவாகவே எழுந்தருளுபவர் என்னும் நம்பிக்கையோடு, குருவைச் சிவமாகப் பாவித்து, ''குருப்யோ நம:' என்று நமஸ்கார முத்திரையால் தியானித்துக் கும்பிடுக.

## சலசுத்தி

இது எட்டு வகையாகச் செய்யப் பெறுவது. ஆரம்பத்தில் சாதகர்கள் மூன்று வகையினைச் செய்தாற்போதும் எனக் கருதுவாரும் உளர்.

## சலசுத்தி எண்வகை

அனுட்டான நீரைச் சுத்தி செய்தல். இதில் எட்டுவித மான சுத்திகள் உண்டு. அவை நீரீட்சணம், புரோட்சணம், தாடனம், அப்பியுட்சணம், தாளத்திரயம், திக்குபந்தனம், அவகுண்டனம், தேனு முத்திரை என்பனவாம்.

நீரீட்சணம் என்றுல் மந்திர உச்சரிப்புடன் பார்த்தல் என்பது கருத்து. நீரிலுள்ள குற்றத்தை வலக்கண்ணுல் உலர்த்தியதாகவும், நெற்றிக் கண்ணுல் எரித்ததாகவும், இடக்கண்ணுல் அமுதங் கொண்டு நனைத்ததாகவும் பார்த்தல்.

புரோட்சணம் என்றுல் தெளித்தல். இது நீர் தூயதாதற் பொருட்டுத் தெளித்ததாகப் பாவனை செய்தல்.

தாடனம் என்றுல் தட்டுதல். சிவசக்தியின் விளக்கம் தூய்மையடைந்த நீரில் உண்டாவதற்காகத் தட்டுதல்.

அப்யுட்சணம் என்றுல் மூடுதல். நீரில் தோன்றிய சிவசக்தியின் விளக்கம் அதனை விட்டு நீங்காதிருக்குமாறு காத்தல்.

தாளத்திரயம் என்றுல் மூன்றுமுறை கைகொட்டுதல். சிவசத்திப் பிரகாசத்துக்குக் கேடு செய்ய வரும் அசுரர் முதலானேரைத் துரத்துமாறு தட்டுதல்;

திக்குபந்தனம் என்றுல் காவல் செய்தல். முன்துரத்திய அசுரர் முதலியோர் வராமற் காத்தற் பொருட்டு எட்டுத் திசைகளுக்கும் காவலமைத்தல். இது அக்கினிப் பிரகாசத்தால் அமைவது.

அவகுண்டனம் என்பது கீழ்நோக்கிச் சுற்றுதல். சிவசக்திப் பிரகாசத்துக்குரிய இடத்தை மூன்று மதில்களாலும் மூன்று அகழிகளாலும் காவல் செய்யும் பாவனையோடு வலமாகச் சுற்றுதல்.

தேனுமுத்திரை காமதேனுவின் பாலைப் பொழிந்ததாக முத்திரை காட்டுதலாம். இது பாவனை.

## சலசுத்தி மூன்றுவகை

1. நீர்ட்சணம் ''ஓம் நமசிவாய'' என்று சிவமூல மந்திரத்தை உச்சரித்தவாறே, வலக்கைச் சுண்டு விரல் நடு விரல்களை உள்ளே மடக்கி, மற்றைய விரல்களை நீட்டி, பெரு விரலுக்கும் அணிவிரலுக்கும் நடுவாக நீரைப் பார்த்தல்.

2. திக்குபந்தனம் ''அஸ்திராயபட்'' என்று மந்திரஞ் சொல்லி, பெருவிரல் நுனியையும் சுட்டுவிரல் நுனியையும் சேர்த்து ஒலி எழுப்புதல்.

3. அவகுண்டனம் ''கவசாய வௌசட்'' என்று உச் சரித்து, நீட்டிய வலக்கைச் சுட்டு விரலால் அந்நீரை மூன்று முறை வளைத்தல்.

## அஸ்திர சந்தியோபாசனம்

சூரிய மண்டல நடுவில் உள்ள சதாசிவமூர்த்தியைச் செவ் வையாகத் தியானித்து உபாசித்தல். அஸ்திரமந்திரத்தை உச்சரித்து மூன்று முறை தர்பணஞ் செய்தல், அதாவது மகழ்வித்தல். வலக்கை நுனியால் தீர்த்தம் விடுதல். இதனுல் கன்மமலம் நீங்கும்.

## ஆசமனம்

ஆசமனம் என்பது நீர் உறிஞ்சுதல். அது மந்திரங் களைச் சொல்லிச் செய்யவேண்டியது. இதனுல் மாயாமலம் சுத்திகரிக்கப் பெறும், நீங்கி நிற்கும்.

ஓம் ஆத்மதத்துவாய சுவதா
ஓம் வித்யாதத்துவாய சுவதா
ஓம் சிவதத்துவாய சுவதா

இவற்றைச் சொல்லி மூன்று முறை சிறிதளவு நீரை உறிஞ்சி உட்கொள்க. இதனுல் பிரமா, விஷ்ணு, உருத் திரன் ஆகிய மும்மூர்த்திகளும் அநுக்கிரகித்தருளுவர். தத்து வங்கள் முப்பத்தாறும் சுத்தமாகும். அவற்றிற் கலந்துள்ள ஆன்மாவும் சுத்தமாகும். இது மந்திராச மனம்.

## அதரசுத்தி

ஆசமனம் செய்தபின், ''அஸ்த்ராயபட்'' என்று அஸ்த்ர மந்திரம் சொல்லி, வலக்கைப் பெருவிரல் அடிப் பாகத்தால் உதடுகள் இரண்டையும் வலம் இடமாக இரண்டு தரமும், உள்ளங்கைகொண்டு கீழாக ஒரு தரமும் துடைத்துக்கொள்க.

## அங்க ஸ்பரிசம்

அங்கஸ் பரிசமாவது மந்திரஞ் சொல்லி உடம்பின் உறுப்புக்களைத் தொடுதல். தொடும் இடங்களின் அதி தெய் வங்களை மகிழ்வித்தற்கும், இடங்களைச் சுத்தஞ் செய்யவும் இதனைச் செய்வர். சிவத்தை அதி தெய்வமாகவுள்ள பெரு விரலையும், அமுதகலையுள்ள அணி விரலையும் சேர்த்து, திவ்விய முத்திரை செய்து தொடுமிடங்களை மந்திரம் சொல் லித் தொடுக.

''ஓம் இருதயாயவௌஷட்'' என்று உச்சரித்து முகம், வல மூக்கு, இட மூக்கு, வலக் கண், இடக் கண், வலக் காது, இடக்காது, கொப்பூழ், மார்பு, வலத்தோள், இடத்தோள், சிரசு என்னும் பன்னிரண்டு இடங்களையும் தொட்டபின் அஸ்திர மந்திரஞ் சொல்லிக் கையைச் சுத் தஞ் செய்க.

## குறிப்பு

ஆசமனம், அதரசுத்தி, அங்கஸ்பரிசம் என்னும் மூன்றும் தொடர்பான கிரியைகளாம். இவை காமிகம் என்னும் ஆக மத்தில் கண்டவாறமைவனவாம்.

## கரசுத்தி

கரசுத்தியாவது கைகளைச் சுத்தஞ் செய்தல். அஸ்த்ராய பட் என்னும் மந்திரம் சொல்லி வலக்கரத்தால் இடக் கரத்தை முதலிற் சுத்தஞ் செய்தல். பின்னர் இடக்கரத் தால் வலக்கரத்தைச் சுத்தஞ் செய்து, மீண்டும் வலக்கரத் தால் இடக்கரத்தைச் சுத்தஞ் செய்க.

## விபூதி சுத்தி

பராசக்தி வடிவமான திருநீற்றை கலா மந்திரங்களால் சுத்தி செய்வது, அத்துவாக்கள் சுத்தமடைவதற்காகவே யாம். அத்துவாக்கள் என்ருல் கலை, தத்துவம், புவனம், வன்னம், பதம், மந்திரம் என்னும் ஆறுமாம்.

மந்திரம் பதத்திலும், பதம் வன்னத்திலும், வன்னம் புவனத்திலும், புவனம் தத்துவத்திலும், தத்துவம் கலை யிலும் அடங்கும். எனவே கலையைச் சுத்தஞ்செய்ய எல்லாம் சுத்தமாகும்.

சம்ஹிதா மந்திரங் கொண்டு அபிமந்திரிப்பதால் ஐந்து கலைகளிலும் நிறைந்திருக்கும் சிவ சத்தி விளக்கம் பெறும். சம்ஹிதா மந்திரங்கள் சிவசத்தியின் வடிவங்களாம்.

## கிரியை முறை

திருநீற்றை வலக்கைப் பெருவிரல் அணிவிரல்களால் எடுத்து, இடக்கையில் வைத்துக்கொண்டு, ''ஓம் அஸ்த்ராய பட்'' என்று நீர் தெளிக்கவும். அத்திருநீற்றில் ஒரு துளி யைப் பெருவிரல் அணிவிரல்களால் எடுத்து, நிருதி மூலை யாகிய தென்மேற்கு மூலையில், ''ஓம் அஸ்த்ராய ஹூம்பட்'' என்று தெளிக்கவும். இதனுல் இராக்கதர் கொடியவர்களின் தீங்குகள் கிட்ட வரா.

பின்னர் திருநீற்றைச் சுத்தி செய்வதற்கு, ''ஓம் நம சிவாய'' என்று நீரீட்சணமும் ''ஓம் அஸ்த்ராய பட்'' என்று திக்கு பந்தனமும் ''ஓம் கௌசாய வௌஷட்'' என்று அவகுண்டனமும் செய்க. பரிசுத்தமானதும், மகா ஐசுவரியமுள்ளதுமான திருநீற்றைச் சுத்தி செய்வது என்ருல் அதன் குணத்தைப் பிரகாசஞ் செய்தல் என்பதாகும்.

## அபிமந்திரித்தல்

அபிமந்திரித்தல் என்பது உருவேற்றுதலாகும். அது பஞ்ச பிரம்ம மந்திரங்கள் என்னும் ஐந்து மந்திரங்களாலும்

ஷடங்க மந்திரங்கள் என்னும் ஆறு மந்திரங்களாலும், ஆகப் பதினொரு மந்திரங்களால் உருவேற்றுதலாகும்.

இடக்கையில் வைத்த திருநீற்றை வலக்கையால் மூடிக் கொண்டு பதினொரு மந்திரங்களையும் பக்தியோடு ஒழுங்காக உச்சரித்தல் வேண்டும். நம: என வருமிடங்களில் ''நமஹ'' என உச்சரிக்கவும்.

## பஞ்சபிரம்ம மந்திரங்கள் 5

ஓம் ஈசானாய நம:
ஓம் தத்புருஷாய நம:
ஓம் அகோராய நம:
ஓம் வாமதேவாய நம:
ஓம் சத்தியோசாதாய நம:

## ஷடங்க மந்திரங்கள் 6

ஓம் இருதயாய நம:
ஓம் சிரசே நம:
ஓம் சிகாயை நம:
ஓம் கவசாய நம:
ஓம் நேத்திரேப்யோ நம:
ஓம் அஸ்திராய நம:

## விபூதி ஸ்நானம்

விபூதி ஸ்நானம் என்பது திருநீற்றுலான முழுக்கு என்பதாம். அது மல ஸ்நானம், விதி ஸ்நானம், மந்திர ஸ்நானம் என மூவகையாக அமையும்.

## மல ஸ்நானம்

ஆன்மாவைப் பந்தித்து நிற்கும் மூல மலமாகிய வலிய ஆணவ மலத்தின் வலுவைக் குறைப்பதற்குத் திருநீற்றை உத்தூளனமாகப் பூசிக்கொள்ளுதல். அஸ்த்ர மந்திரத்தை

உச்சரித்து, வலக்கைப் பெருவிரல், அணிவிரல் இரண்டாலும் சிறிதளவு திருநீற்றை எடுத்துச் சிரசு, நெற்றி, மார்பு, தோள்கள் முதலிய இடங்களில் பூசிக்கொள்க. இது பஸ்மஸ் நானம் எனவும் வழங்கும். இங்ஙனம் செய்வதால் ஆரோக்கிய உடம்பும், பூரித்த மனமும் உண்டாகும் என்பது திண்ணம். இது உட்செறிவதை உக்கருடணம் என்றும், வெளிச் செறிவதை ஆகருடணம் என்றும் வழங்குவர்.

## விதி ஸ்நானம்

விதி ஸ்நானம் என்பது திருநீற்றை நீர் விட்டுக் குழைத்து மந்திர பூர்வமாகத் தரிக்க வேண்டிய தானங்களில் திரிபுண்டரமாகத் தரித்தல். இதைத் திரிபுண்டரத் தாரணம் என்பர். இது முக்குறிகளாக அமைவது. சுட்டுவிரல், நடுவிரல், அணிவிரல் ஆகியவை கொண்டு குறிகள் இடுதல்.

## நீர்விட்டுக் குழைத்தல்

இடக் கையில் இருக்கும் திருநீற்றின் மீது, வலக் கைப் பெருவிரலோடு கூடிய நடுவிரலினாலே, "ஓம் இருதயாய வௌஷட்" என்று உச்சரித்து நீர்விட்டு "ஓம் கவசாய வௌஷட்" என்று உச்சரித்து இரு கைகளாலும் குழைத்துக் கொள்க.

## மூன்று குறிகளாகத் தரித்தல்

திரிபுண்டரம் என்னும் மூன்று குறிகளாகத் தரிக்க வேண்டிய இடங்களில் அவற்றுக்குரிய அளவாகத் தரித்தல் அவசியம். குறிகள் வளையாமலும், ஒன்றை ஒன்று தீண்டாமலும் அமைதல் வேண்டும்.

## தரிக்க வேண்டிய தானங்கள்

மூன்று குறிகளாகத் தரிக்க வேண்டிய தானங்கள் பதினொருகும். அவை சிரம், நெற்றி, மார்பு, கொப்பூழ், முழந்தாள்கள் இரண்டு, புயங்கள் இரண்டு, முழங்கைகள் இரண்டு, மணிக்கட்டுகள் இரண்டு, விலாப்புறம் இரண்டு, முதுகு, கழுத்து என்பனவாம். இது மெய்கண்ட சைவ சித்தாந்த பரம்பரையினர்க்குரியது.

## குறிகளின் நீளம்

நெற்றியில் இரண்டு கடைப்புருவ எல்லை நீளமும், மார்பிலும் புயத்திலும் ஆறு அங்குல நீளமும், மற்றத் தானங்களில் ஒவ்வொரு அங்குல நீளமும் அமைதல் முறை யாகும். மிகுதலும் குறைதலும் ஆகா.

## முக்குறிகளின் கருத்து

முக்குறிகளுக்கும் உருத்திரன், மகேசன், சதாசிவன் அதி தெய்வங்களாம். ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களையும் நீக்குதலே முக்குறிகள் அணிதலின் பாவனை யாகும்.

## தரிக்கும் தானங்களும் மந்திரங்களும்

மந்திரஞ் சொல்லிக் குழைத்த திருநீற்றை மேலும் மந்திரங்கள் சொல்லிக் குறிக்கப்பட்ட தானங்களில் தரிக் குப்போது, பெரும்பான்மைத் தானங்களில் வலக்கை நடு விரல்கள் மூன்றினாலும் தரிக்கவேண்டிவரும். அவ்விடங் களில் இடமிருந்து வலமாகவே குறிகளை அமைத்தல் வேண் டும். ஒருசில இடங்களில் இடக்கை நடுவிரல்களால் அமைக் குப்போது வலமிருந்து இடமாகவே அமைத்தல் வேண்டும். சிரசு, கழுத்து ஆகிய இடங்களில் இரண்டு கைகளாலும் தரித்தல் இன்றியமையாததாகும்.

குறிகள் தரிக்கும்போது விரல்களில் மேலதிக நீறு சேர் வதற்காகக் கைகளைச் சேர்த்துத் தடவிக்கொள்ளும்போது, ''ஓம் அஸ்த்ராய பட்'' என்று உச்சரித்தல் அவசியமாகும்.

| மந்திரங்கள் | இடங்கள் |
|---|---|
| ஓம் ஈசானாய நம:— | சிரசு |
| ஓம் தத்புருஷாய நம:— | நெற்றி |
| ஓம் அகோராய நம:— | மார்பு |
| ஓம் வாமதேவாய நம:— | கொப்பூழ் |
| ஓம் சத்தியோஜாதாய நம:— | பன்னிருதானங்கள் |

வலமுழந்தாள், இடமுழந்தாள், வலப்புயம், இடப் புயம், வலமுழங்கை, இடமுழங்கை, வலமணிக்கட்டு, இட மணிக்கட்டு, வலவிலா, இடவிலா, முதுகு, கழுத்து.

குறிப்பு:- சிலர் விலாப் புறங்களை விடுத்துச் செவிகள் இரண்டையுங் கொள்வதும் வழக்கமாம்.

## தானங்களும் அதிதெய்வங்களும்

திரிபுண்டரம் தரிக்கும் தானங்களில் உறையும் அதி தெய்வங்கள் தோன்றி நின்று மகிழ்ந்து மலபந்தத்தை நீக்க அருள் செய்யும் என்பது நம்பிக்கையாகும். உச்சி - சதாசிவன். நெற்றி - மகேஸ்வரன். மார்பு - உருத்திரன். கொப்பூழ் - திருமால். முழந்தாள்கள் - பிரமன். வலத் தோள் - வாமை. இடத்தோள் - சேட்டை. வலமுழங்கை - ரௌத்ரி. இடமுழங்கை - காளி. வலமணிக்கட்டு - கலவி கரணி. இடமணிக்கட்டு - பலவிகரணி. வலதுவிலா - பலப்ர மதணி. இடதுவிலா - சர்வபூதமனி. முதுகு கழுத்து - மனோன் மணி.

## மந்திரஸ்நானம்

திரிபுண்டரம் தரித்து எஞ்சிய விபூதியோடு நீர் விட்டுக் கையலம்பி, நீரை வலக்கையில் விட்டு, விரல்களை உள்ளே மடக்கி, கும்ப முத்திரையாகப் பிடித்துக்கொள்க. ''ஓம் ஈசானாய நம: ஓம் தத்புருஷாய நம: ஓம் அகோராய நம: ஓம் வாமதேவாய நம: சத்தியோசாதாய நம: என்னும் பஞ்சப் பிரம்ம மந்திரங்களையும் சொல்லி, ஒழுகும் நீரைச் சிரசிலே தெளித்துவிடுக. பின்னர் கைகழுவிக்கொள்க. மூன்று தரம் கைகளைத் தட்டி, நிவ்விருத்திகலாயை நம: பிரதிஷ்டாகலாயை நம: வித்தியாகலாயை நம: சாந்தி கலாயை நம: சாந்தியதீதகலாயை நம:'' என்று மந்திரங் களைச் சொல்லிக்கொள்க. இருதயாய நம: என்று கூறி நிலத்திலே சிந்திய விபூதி இருதயத்தை அடைந்ததாகப் பாவனை செய்துகொள்க. இதனால் ஆணவமலச் சேட்டை ஒடுங்கும்.

## ஆசமனம்

முன் செய்த முறையில் மூன்று மந்திரங்களையும் உச்சரித்து மூன்றுமுறை நீர் உறிஞ்சிக்கொள்ளவும். உதடுகளைச் சுத்தஞ் செய்துகொள்ளவும். தத்துவசுத்திக்கு இது மீண்டும் செய்ய வேண்டும் என்பர்.

## தொடுமிடம் தொடுதல்

மீண்டும் சுத்தி திடமாதற் பொருட்டுத் தொடும் இடங்களைத் தொடவும்.

## மானதஸ்நானம்

உயிரும் உடம்பும் தூயதாதற் பொருட்டு மானதஸ்நானம் செய்தல் அவசியமாகும். பிராணன் முதலிய வாயுக்களை அடக்கிக்கொண்டு, சிவமூல மந்திரத்தைச் சிந்தித்து சிவத்தோடு ஒருமைப்பாடுகொள்ளுவதற்கு, சிவசக்தியின் வலத் திருக்கரத்திலிருந்து ஒழுகும் அமுத வெள்ளத்தில் உடல் முழுதும் நனைந்து உள்ளும் புறமும் தூய்மைபெற்றதாகப் பாவனை செய்க.

## சகளீகரம்

சகளீகரம் என்பது பூதவுடலைச் சிவசரீரமாகச் செய்தல். சிவ வடிவத்துக்குரிய சிவ மந்திரங்களை உடலிற் பதித்து, சிவவடிவத்தை உண்டாக்கிக்கொள்ளுதலாகும். சகளம் + கரணம் = சகளீகரணம் அதாவது சிவசரீரம் செய்தல். சைவக் கிரியையில் இது உயிர் போன்றது என்பர்.

சகளீசரணம் மூவகைப்படும். அவை கரசுத்தி, கர நியாசம், அங்க நியாசம் என்பனவாம். நியாசம் என்ருல் பதித்தல், தொடுதல் என்பது பொருள்.

## கரசுத்தி

கையைச் சுத்தஞ் செய்தல். ''ஓம் அஸ்த்ராயபட்'' என்று உச்சரித்து வலக்கையால் இடக்கையை மேலும் கீழும், இடக்கையால் வலக்கையை மேலும் கீழும் தடவி,

அசுத்தங்களை அக்கினியிலே பொசுக்கியதாகப் பாவிக்கவும். இரு கைகளையும் குவித்துச் சக்தி அமிர்தத்தால் கைகள் நனைந்ததாகப் பாவித்துக் கும்பிடுக.

## கரநியாசம்

கையிலே சிவ மந்திரங்களைப் பதித்தல். இரு கைகளையும் சிவபெருமானுக்குரிய தாமரை ஆசனமாகப் பாவித்தல். சிவ மந்திரத்தால் கைகளைச் சிவ வடிவாகப் பாவனை செய்தல் கைகளில் சிவபெருமான் எழுந்தருளியதாகக் கருதல்.

## அங்கநியாசம்

கைகளிலே சிவபெருமான் எழுந்தருளியதாகப் பாவனை செய்து, அங்கங்களைத் தொட்டு அங்கெல்லாம் சிவம் பதிந்ததாகக் கொள்ளல். அங்கம் சிவ வடிவினதாகிவிட்டதாகப் பாவனை செய்தல்.

பெருவிரல் அணிவிரல் கொண்டு சிவத்தை அங்கமெங்கும் பதித்தல். ஈசானம் முதலாய மத்திரங்களை உச்சரித்தல் சிவ சொரூப பாவனை செய்து சிவத்தியானஞ் செய்தல். கரநியாசமும் அங்கநியாசமும் சேர்ந்ததே சகளீகரம்.

## பிராணயாமம்

பிராணயாமம் என்பது பிராணவாயுவை அடக்குதலாகும். பிராணன் என்பது பிராணவாயு. ஆயாமம் தடுத்தல். பிராணயாமம் பிராணவாயுவைத் தடுத்துப் போக்கு வரவு செய்ய ஒழுங்காக்குதல். மனத்தை அடக்குவதற்குப் பிராணயாமம் உதவியாயிருக்கும்.

பிராணயாமம் பூரகம், கும்பகம், ரேசகம் என்னும் மூன்று பிரிவுகளையுடையது. பூரகம் என்பது வெளியேயுள்ள வாயுவை இடது நாசியிலுள்ள சந்திரகலை என்னும் இடைகலை நாடியினால் உள்ளே இழுத்து நிரப்புதல். கும்பகம் என்பது உள்ளே நிரப்பிய வாயுவை, நடுவில் உள்ள சுழுமுனை நாடியிற் சென்று நிறையும்படி உள்ளே நிறுத்துதல். ரேசகம் என்பது உள்ளே நிறுத்திய வாயுவை வலது நாசியில் உள்ள சூரியகலை என்னும் பிங்கலை நாடியினால் வெளியில் விடுதல்.

பூரகஞ் செய்வதற்கு நேரம் பதினாறு மாத்திரை. கும்பகஞ் செய்வதற்கு நேரம் முப்பத்திரண்டு மாத்திரை. ரேசகம் செய்வதற்கு நேரம் எட்டு மாத்திரை. பிராணாயாமம் குறைந்தது மூன்று முறையாவது செய்தல் வேண்டும்.

மந்திரத்தோடும் தியானத்தோடும் செய்யும் பிராணாயாமம் சகற்பம் எனப் பெயர் பெறும். மந்திரம் தியானம் இன்றிச் செய்வது அகற்பம். பிராணாயாமத்தால் மனம் குவிந்து சிவத்தியானம் செய்ய உதவியாயிருக்கும்.

## பிராணாயாமம் செய்தல்

வலக்கைச் சுட்டுவிரல், நடுவிரல் இரண்டையும் உள்ளே மடக்கி, பெருவிரலால் வலதுமூக்கையும், அணிவிரலால் இடது மூக்கையும் பிடித்து வாயுவை உயர்த்தி நிறுத்துக. அதன்பின் இடதுமூக்கை அணிவிரலால் அழுத்திக்கொண்டு வலத்துவாரத்தால் உள்ளே உள்ள காற்றை வெளியே விடுக.

பின்னர் வலப்பக்கத்தை அழுத்திக்கொண்டு இடப்பக்கத்தால் இயன்றளவு மூச்சை உள்ளே இழுக்க. இழுத்த காற்றை உள்ளே நிறுத்துக. பின்னர் வலது மூக்கால் வெளியேவிடுக. இது ஒரு பிராணாயாமம். இதைப்போல் இந்தமுறையில் மூன்றுதரமாயினும் இழுத்து, நிறுத்தி, விடுக. பழகப்பழக பன்முறை செய்தால் நாடி சுத்தியாகும்.

## மந்திரங்களை உச்சரித்தல்

பிராணாயாமத்தின்போது, ''ஓம் ஈசானாய நம:'' முதலாகவுள்ள பதினொரு மந்திரங்களையும் மூன்றுமுறை உச்சரித்தல் முறை. உச்சரித்து முடிந்ததும், 'ஓம் நமசிவாய' என்னும் சிவமூல மந்திரத்தை உச்சரித்து வலக்காதைப் பொத்துக.

வலக்காதில் அக்கினி முதலிய தேவதைகள் இருப்பதால் இரேசகம், பூரகம், கும்பகம் செய்த கை சுத்திகரிக்கப் பெறுவதற்காக வலக்காதை பொத்துதல் பாவனையாகும்.

## சிவதீர்த்த கரணம்

சிவதீர்த்த கரணம் என்பது அநுட்டான நீரைச் சிவ தீர்த்தமாகச் செய்தல், பாவித்தலாகும். இதைச்செய்வதற்கு ''ஓம் இருதயாய வௌஷட்'' என்று உச்சரித்து புருவ நடுவில் உள்ள அமிர்தத்தை நுனிவளைந்த சுட்டு விரலிஞலே எடுத்து, நீரிலே வைத்ததாகப் பாவனை செய்யவும். நுனி வளைந்த விரல் அங்குசமுத்திரை எனப் பெயர்பெறும்.

பின் ''ஓம் நமசிவாய'' என்று அபிமந்திரித்து, ''ஓம் அஸ்த்ராயபட்'' என்று திக்குபந்தனமும், ''ஓம் கவசாய வௌஷட்'' என்று அவகுண்டனமும் செய்க. இவற்ருல் அமிர்தமயமான தீர்த்தம் சிவதீர்த்தமாய் அமையும். இக் கிரியையால் பின்னர் செய்ய இருக்கும் கிரியைகள் அநுகூல மடையும்.

## சந்தியா சக்தி தியானம்

அக்கினியிற் சூடுபோல சிவத்தோடு சகலகரும சாட்சிணியாய் இருக்கும் சிவசத்தியே சந்தியாசக்தியாவள்.

சந்தியா காலங்களில் நன்ருகத் தியானிக்க வேண்டியது சந்தியா. சம் - செவ்வனே. தியா - தியானித்தல்.

சிவசக்தி அபரை, பராபரை, பரை என முத்திறப்படும்.

அபரை பிராமி, வைணவி, ரௌத்திரி என மூவகைப் படும். பிராமி சகல உலகங்களையும் படைப்பவள்.

வைணவி சகல உலகங்களையும் காப்பவள். ரௌத்ரி சகல உலகங்களையும் அழிப்பவள்.

பராபரை ஞானசக்தி, கிரியாசக்தி, இச்சாசக்தி என மூவகைப்படும்.

சமயதீட்சை பெற்றவர் பிராதக்காலத்தில் பிராமியை இருதயத்திலும் சாயங்காலத்தில் ரௌத்ரியை பிரமரந்திரத் திலும் வைத்துத் தியானித்தல் முறையாகும்.

பிராமி அன்னவாகனத்தில் பதுமாசனம் பொருந்த நான்கு திருமுகங்களும் எட்டுப்புயங்களும் கொண்டு எழுந்தருளியிருப்பள்.

வைணவி கருடவாகனத்தில் எழுந்தருளியிருப்பள். ரௌத்ரி இடபவாகனத்தில் எழுந்தருளியிருப்பள்.

தியானம் என்பது கருமம், தவம், செபம், தியானம், ஞானம் எனவுள்ள ஐந்தனுள் நான்காவதாய், ஞானத்துக்குக் காரணமாய் உள்ளது.

## மந்திர ஸ்நானம்

மந்திர ஸ்நானம் என்பது மந்திரத்தினுலாய ஸ்நானம் என்பதாகும். இதை மந்திராபிஷேகம் எனவும் வழங்குவர். வலக்கையினுல் சிவதீர்த்தமான அமுதநீரை எடுத்து, கும்ப முத்திரையாகப் பிடித்து இடக்கைமேல்வைத்துக்கொண்டு, ''ஓம் ஈசாஞய நம:'' முதலிய பதினெரு மந்திரங்களையும் உச்சரித்து, சிவமூலமந்திரம் சொல்லிச் சிரசிலே தெளிக்கவும். இதனுல் தான்பெற்ற அருட்பேறு உறுதிப்படும் என்பது பாவனை.

## மார்ச்சனம்

மார்ச்சனம் என்பது தூலசரீரத்தைச் சுத்தி செய்தல் என்பதாகும். அஃதாவது தூலசரீரம் பற்றி வந்த தீவினைகள் ஒழிதல். சிவ தீர்த்தத்தை வலக்கையால் மூடிக்கொண்டு, ''ஓம் ஈசாஞய நம:'' முதலிய பதினெரு மந்திரங்களையும் உச்சரித்து, வலக்கையால் தீர்த்தத்தை எடுத்து இடக்கையில் விட்டு, இடக்கையிலிருந்து ஒழுகும் தீர்த்தத்தை 'ஈசாஞய வௌஷட்' முதலாய பதினெரு மந்திரங்களையும் சொல்லி, வலக்கையினுல் பதினெருமுறை சிரசிலே தெளிக்கவும்.

## அகமர்ஷணம்

அகமர்ஷணம் என்பது அகத்திலுள்ள பாவங்களையும், சூக்குமசரீரத்தால் உண்டான பாவங்களையும் கெடுத்தல் என்பதாம். மார்ச்சனம் செய்தபின் இடக்கையில் எஞ்சி

யிருந்த தீர்த்தத்தை, மூக்குக்கு அருகில் பிடித்து பாவனை பண்ணவும்.

இந்த நீர் வெண்ணிறமுள்ள தருமவடிவாகி, இடமூக்கு வழியாக உள்ளே புகுந்து, அங்குள்ள பாவத்தை அழித்து, அந்தப்பாவம் மைக்குழம்புபோல வலது மூக்கு வழியாக வெளியேவந்து கையில் தங்கியது. அதைத்தனது வலக்காற் பெருவிரலில் ஒளிவிடும் அக்கினியிலே விட்டதாகவும் பாவனை பண்ணவும். வலக்காற் பெருவிரலிலே விட்டதாகப் பாவனை பண்ணிக் கையசைத்து, கோபக்குறிப்பாக புருவமுறிப்புடன், ''ஓம் அஸ்த்ராய ஹூம்பட்'' என்று பாவம் சாம்பரான தாகக் கருதி, ''ஓம் அஸ்த்ராயபட்'' என்று கையலம்பி சாம்பரானது தணிந்தது எனக்கருதுக.

## தருமவடிவம் விளக்கம்

தருமவடிவாக வருவது சிவபுண்ணியம். இது சிவபெருமானை மெய்யன்போடு வழிபடுவதால் வருவது. சிவபுண்ணியம் பாவகன்மங்களை எரித்தொழிக்கும் தன்மை வாய்ந்தது. அது வெண்ணிறம் பொருந்தியது.

## சூக்குமசரீரம் விளக்கம்

சூக்குமசரீரம் புரியட்டகசரீரம் எனவும் பெயர்பெறும். அதில் சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம் என்னும் தன் மாத்திரைகள் ஐந்தும்; மனம், புத்தி, ஆங்காரம் என்னும் அந்தக்கரணங்கள் மூன்றும் ஆக எட்டும் கூடியிருக்கும். அது அணுவளவு பரிமாணம் உள்ளது. தூலசரீரங்கள் பல தோன்றுவதற்கு காரணமாய் இருப்பது. அது முத்திப்பேறு வரை நிலைபெற்றிருப்பது. தூலசரீரம் பலமுறை தோன்றி அழிவது.

## ஆசமனம் முதலியன

அகமருஷணத்தின் பின், மீண்டும் ஆசமனம் செய்து, தொடுமிடங்கள் தொட்டு, கரநியாசம் அங்கநியாசம் செய்க. இவற்றை மீண்டும் மீண்டும் செய்வதால் கூடியபலன் உண்

டாகும். சிபரூபம் மேலும் திடம்பெறும். தெய்வங்கள் மகிழ்ச்சியடையும்.

## கவசவேஷ்டனம்

கவசவேஷ்டனம் என்பது தன்னைப் பாதுகாப்பது என்பதாகும். கவசம் - காப்பது. வேஷ்டனம் - சுற்றுதல்.

தன்னைச் சூழ அக்கினிக்கோட்டை உண்டாக்கியதாகப் பாவித்துக் காவல் செய்தலாகும்.

வலக்கையில் நீர் கொண்டு, ''கவசாய வௌஷட்'' என்று உச்சரித்துத் தன்னைத்தானே சுற்றிவந்து, நீரை நிலத்திலே விடுக.

## சதாசிவத்தியானம்

சதாசிவமூர்த்திக்கு ஆன்மா உடைமைப்பொருள். எனவே அவரைத் தியானித்து வணங்கினால் அவர் ஆட்கொண்டருளுவர். சதாசிவமூர்த்தம் சூரியமண்டலத்தின் நடுவே உள்ளது. அவர் பத்மாசனத்தில் ஐம்முகப் பெருமானாய் எழுந்தருளியிருப்பர். ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம் என்னும் திருமுகங்கள் ஐந்தும் முறையே வெண்ணிறம், பொன்னிறம், கருமை நிறம், செந்நிறம், மிக்கவெண்மை நிறம் உள்ளவை. சதாசிவனார் முகங்கள் தோறும் முக்கண்களும் உள்ளவர். பத்துத் திருக்கரங்கள் உள்ளவர். பரசு, கட்கம், சூலம், வச்சிரம், அக்கினி என்பன வலப்பாகத்திலும்; இடப்பாகத்தில் அபயம், மணி, நாகம், பாசம், அங்குசம் என்பனவும் உள்ளவர். சதாசிவப்பெருமானை இவ்வண்ணம் இயன்றளவு பாவனை செய்து தியானிக்கவும். தியானத்தால் பெரும்பேறுகள் கிட்டும். முதற்பேறு மனத்தை அலையவிடாமல் தடுத்ததாகும்.

## சிவ காயத்திரி ஜபம்

சிவ காயத்திரி மந்திரம் மிகமேலானது. அதனை உச்சரித்துச் செய்வனவற்றைச் சிவபெருமான் பெரிதும் மகிழ்

வர். சிவ காயத்திரியைச் சிந்தித்துத் தியானம் செய்து அவளின் மந்திரத்தை உச்சரிக்கவும்.

''ஓம் தந் மஹேசாய வித்மஹே வாக்
விசுத்தாய தீமஹி தந்நோ சிவப்ரசோதயாத்''

இம் மந்திரத்தை மூன்றுமுறை உச்சரித்து, நெஞ்சுக்கு நேராக நீரை அள்ளிவிடுத்து (அர்க்கியம் கொடுத்து) அதன் பின் இதனைப் பத்துத்தரமாயினும் உச்சரிக்கவும்.

இதனால் சிவசக்தி விளக்கமும் அறிவுப்பெருக்கமும் உண்டாகும். மனச்சாந்தி அதிகரிக்கும்.

## தர்ப்பணம்

தர்ப்பணம் என்பது தமிழில் தருப்பணம் எனவழங்கும். தர்ப்பணம் என்றால் உவப்பித்தல், மகிழ்வித்தல் என்று பொருள். அது கொடுத்தலால் உண்டாக்கும் மகிழ்ச்சி, உவகையாகும்.

தர்ப்பணத்தால் சிவம், சத்தி, கணபதி, கந்தன், மாகாளன், தேவர்கள், இருடிகள், மானுடர்கள், பூதர்கள், பிதிர்கள், ஆசாரியர்கள் முதலானோரைத் திருப்திப்படுத்தி மகிழ்விப்பதாகப் பாவனை. இது சிவபுண்ணியங்களுள் ஒன்று. கன்மம் எனப்பெயர் பெறுவது.

## தர்ப்பணம் செய்யும் முறை

வலக்கையில் நீர்கொண்டு, இடக்கையால் தாங்கிக் கொண்டு, மந்திரங்களை உச்சரிக்கும்போது, கைவிரல்களின் வழியாக நீரை விழச்செய்க ,'ஓம் நமசிவாய'' என்று மூன்று முறை தர்ப்பணம் செய்க. ''ஓம் நமசிவாய'' என்று பத்து முறை ஜெபிக்கவும். பின்னர் ''ஓம் நமசிவாய'' என்று ஒரு முறை தர்ப்பணம் செய்க.

பின்னர் ''ஓம் ஈசானாய சுவாகா'' என்பது முதலாக பதினொரு மந்திரங்களையும் உச்சரித்துத் தருப்பணம் செய்க.

ஈற்றில் அவரவர்க்குரிய மூல மந்திரத்தை உச்சரித்துத் தர்ப் பணஞ் செய்துவிடுக.

ஓம் உமதேவ்யை நம:
ஓம் கணபதேய நம:
ஓம் சரவணபவாய நம:
ஓம் ஹாம் சர்வேப்யோ மந்திரப்யோ ஸ்வாகா
,, ,, ,, தேவோப்யோ ஸ்வாகா
,, ,, ,, ருஷிப்யோ நம:
,, ,, ,, மனுஷ்யேப்யோ வஷட்
,, ,, ,, பூதேப்யோ வௌஷட்
,, ,, ,, பிதிர்ப்யோ ஸ்வதா
,, ,, ,, ஞாதிப்யோ ஸ்வதா
,, ,, ,, ஆசார்யேப்யோ ஸ்வதா

இங்ஙனம் கொடுக்கும்போது, தீர்த்தம் அவரவர்க்காகும் போது, தேவதீர்த்தம், ஆரிடதீர்த்தம், மானுடதீர்த்தம், பூததீர்த்தம், பிதிர்தீர்த்தம் என்றெல்லாம் பெயர்பெறும். பிதிர்களுக்குத் தர்ப்பணஞ் செய்யும்போது சிறிதளவு எள் சேர்த்தல் பெரிதும் உவப்பானதாகும்.

## ஆசமனம் முதலியன

தர்ப்பணம் செய்தபின் மீண்டும் ஆசமனம், தொடும் இடம் தொடுதல், கரசுத்தி, கரநியாசம், அங்கநியாசம் முதலியன செய்க.

## தீர்த்தோபசங்காரம்

தீர்த்த உபசங்காரம் என்பது நீரில் உள்ள மந்திரங்கள் முதலியவற்றை ஒடுக்குதலாம். முன்னர் நீரிலே வைத்த அமிர்தத்தை ''இருதயாய வௌஷட்'' என்று உச்சரித்து, நான்கு விரல்களையும் மடக்கிப் பிடித்துப் பெருவிரலால்- சங்காரமுத்திரையால் எடுத்துப் புருவமத்தியிலே ஒடுக்கி விடுதலாகும். இதனால் நெற்றியில் நீர்ப்பொட்டு இட்டு

விந்துத்தானத்தைப் பாதுகாத்தலாகும் என்பது பாவனை. மீண்டும் ஆசமனம் முதலியன செய்துகொள்க.

## சூரியோபஸ்தானம்

சூரிய உபஸ்தானம் என்பது சூரிய மூர்த்தியினிடத்துச் சிவனை அடுத்துவைத்தல், சார்த்தல் என்பதாகும். உபஸ் தானம் அடுத்தல், சார்த்தல். ''நான் செய்தேன் நான் செய்தேன்'' என்னும் செருக்கின்றி, எல்லாம் சிவன் செயல் என்று பரிபூரணமாகக் கருதி, அவரிடம் எல்லாவற்றையும் ஒப்படைத்தல் இக்கிரியையின் பாவனையாகும்.

இது ஆன்மசக்தியை சிவசக்தியாக்கி சூரிய கிரணத்தின் வழியாய் அங்குள்ள சிவமூர்த்தியிடம் ஒப்படைத்தல் என்ப தாகும்.

இரண்டு கைகளிலும் நீரை ஏந்தி, ''ஓம் ஈசானாய நம:'' முதலிய பதினொரு மந்திரங்களையும் உச்சரித்து, அதன்பின் சிவமூல மந்திரத்தைப் பத்துத்தரம் உச்சரித்து, ''ஓம் சிவ சூர்யாய சுவாஹா'' என்று சொல்லி, ஒருமுறை தர்ப்பணஞ் செய்க.

## சிவமந்திர செபநிவேதனம்

தீட்சாகுரு உபதேசித்த சிவமூல மந்திரத்தை தூலபஞ் சாட்சரமாகவேனும், சூக்கும பஞ்சாக்கரமாகவேனும் 108 முறை உச்சரித்தல்.

அநுட்டான வேளையில் நிகழ்ந்த குறைகள் நீங்கும் பொருட்டு, அகோர மந்திரஞ் சொல்லியபின் மூலமந்திர செபஞ் செய்க. இதற்கு 108 அல்லது 54 மணிகள் கொண்ட உருத்திராக்க மாலை உபயோகமாகும். மனத்தால் உச்சரித் தல் சிறந்தது. முத்திப் பேற்றை விரும்புவோர் உருத்திராக்க மணிகளை மேல்நோக்கித் தள்ளியும், போகபோக்கியங்களைக் கருதுவோர் அவற்றைக் கீழ்நோக்கித் தள்ளியும் செபஞ் செய்வர். செபமாலையை வெளியில் தெரியா வண்ணம் மறைத்து வைத்து, நாயக மணியைத் தாண்டாமல், உருட்

டிக்கொள்ளவும். செபமாலை கிடைக்காவிடின் கைவிரல் இறைகளைக் கொண்டு கணக்கிட்டுக்கொள்ளலாம். சிவமந்திரமாய பஞ்சாக்கர செபம் சைவ அநுட்டானத்தின் உயிர் போன்றது என்பர்.

பஞ்சாக்கர செபத்தின் முன் விநாயகப் பெருமானை நினைத்துக் குட்டிக் கும்பிட்டு, சிவபெருமானின் உருவத்திரு மேனியைத் தியானித்துக்கொள்ளவும்.

## உருத்திர தியானம்

"மைக்களமும் மான்மழுவும் வரதமுட னபயமுறு
மெய்க்கரமு நாற்புயமும் விளங்குபணிக் கொடும்
[பூணும்
செக்கருறு மதிச்சடையுஞ் சேயிழையோர்
[பாகமுமாய்
முக்கணிறை யாங்காண முன்னின்றே அருள்
[புரிந்தான்"

## திருமுறைகள் ஓதுதல்

பின்னர் திருச்சிற்றம்பலம் எனச் சொல்லிச் சிவபெருமானுக்குரிய பன்னிரு திருமுறைகளுள் பஞ்சபுராணம் எனப் போற்றப்பெறும் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம் ஆகியவற்றுள் ஒவ்வொரு பாடலாயினும் பண் பிசகாமல் படித்து வணங்குக. திருச்சிற்றம்பலம் சொல்லி முடிக்க.

## தெய்வமூர்த்த தோத்திரங்கள்

பின்னர் தேவி, விநாயகர், சுப்பிரமணியர் முதலாய மூர்த்திகளைத் தோத்திரஞ் செய்யவும். சமயகுரவர், அறுபத்துமூவர், சந்தானகுரவர் முதலானோரையும் இயன்றளவில் மனத்தால் நினைத்து வணங்குக. பாடுக.

## பிரதட்சண நமஸ்காரம்

சிவபெருமானின் திருவருளைப் பரிபூரணமாகப் பெறுவதற்குரிய வணக்கம். முதலில் தனக்கு தீட்சை செய்த குருவை

நினைத்து வணங்கிவிட்டுத் திக்குப் பாலகர் எண்மரின் மந்திரங்களைக் கூறிய வண்ணம் தன்னைத் தானே மூன்று முறை சுற்றி வலம் வருக.

| | | |
|---|---|---|
| ஓம் இந்திராய நம: | — | கிழக்கு |
| ஓம் அக்னயே நம: | — | தென்கிழக்கு |
| ஓம் யமாய நம: | — | தெற்கு |
| ஓம் நிருதயே நம: | — | தென்மேற்கு |
| ஓம் வருணாய நம: | — | மேற்கு |
| ஓம் வாயுவே நம: | — | வடமேற்கு |
| ஓம் குபேராய நம: | — | வடக்கு |
| ஓம் ஈசானாய நம: | — | வடகிழக்கு |

## வீழ்ந்து வணங்குதல்

திருக்கைலாயத்தில் எழுந்தருளியுள்ள உமாமகேஸ்வரரை நினைந்து, வடக்கு நோக்கி, "ஓம் பார்வதி சமேத பரமேஸ்வராய நம:" என்று சொல்லிக் கும்பிட்டு மூன்று முறை சாஷ்டாங்கமாக வீழ்ந்து வணங்குக.

சாஷ்டாங்க நமஸ்காரம் - அட்டாங்க நமஸ்காரம். இது ஆண்களுக்குரியது. தலை, கைகள் இரண்டு, காதுகள் இரண்டு, மோவாய், புயங்கள் இரண்டு ஆக எட்டுறுப்புகளும் நிலத்திலே படும்படியாக வணங்குதல்.

பஞ்சாங்க நமஸ்காரம் - ஐந்து உறுப்புகள் தோய வணங்குதல் பெண்களுக்குரியது. தலை, கைகள் இரண்டு, முழந்தாள்கள் இரண்டு ஆக ஐந்துறுப்புகள் நிலத்திலே படும்படியாக வணங்குதல். பின்னர் ஆசமனம் முதலியன செய்து கொள்க.

## அநுட்டான நிறைவு

"ஓம் அஸ்த்ராய பட்" என்று அநுட்டானஞ் செய்த இடத்தை நீர் தெளித்துச் சுத்தஞ் செய்க. அதனைத் தொட்

டுக் கண்களில் ஒற்றிக்கொள்க. அநுட்டான பாத்திரத்தில் எஞ்சியிருக்கும் நீரைத் தூரத்திலே, கால்படாத இடத்திலே ஊற்றிவிடுக.

பின்னர் சிறிதளவு திருநீறு தரித்து அநுட்டான பலன் சித்திக்கும் பொருட்டும், கிரியைக் குறைவால் உண்டாகிய குற்றம் நீங்கும் பொருட்டும், மனச் சாந்தியின் பொருட்டும் ''ஓம் அகோராய நம:'' என்னும் மந்திரத்தைச் செபித்துக் கொள்க.

## சிவசூரிய நமஸ்காரம்

சூரிய மண்டல மத்தியில் சதாசிவமூர்த்தி எழுந்தருளி இருப்பதால் சூரியனைச் சிவசூரியன் என்பர். காலையில் அநுட்டானத்தை முடித்துக்கொண்டு, கிழக்கு நோக்கி சூரியனைத் தரிசித்து, துதித்துத் தன்னைத் தானே இரண்டு முறை சுற்றிச் சூரியனின் பன்னிரு பெயர்களையும் சொல்லிக் கும்பிட்டுப் பன்னிருமுறை நமஸ்காரஞ் செய்தல் முறை. அநுட்டானத்தின் பின் சூரியனை வணங்குதல் வேண்டும்.

ஓம் வைகர்த்தனாய நம:
ஓம் விவஸ்வதே நம:
ஓம் மார்த்தாண்டாய நம:
ஓம் பாஸ்கராய நம:
ஓம் ரவயே நம:
ஓம் லோகப்பிரகாசாய நம:
ஓம் லோக சாட்சிணே நம:
ஓம் திரிவிக்கிரமாய நம:
ஓம் ஆதித்தாய நம:
ஓம் மகா சூரியாய நம:
ஓம் அம்சுமாலினே நம:
ஓம் திவாகராய நம:

## கோபூசை

கோபூசை என்பது பசுவைப் பூசித்தலாகும். வீட்டுக்கொரு பசுவை விரும்பி வளர்த்தல் இலட்சுமி கடாட்சமுமாகும். அநுட்டானஞ் செய்து சூரியனை வணங்கியபின், ஒரு கைப்பிடி புல் அல்லது இலை தழை எடுத்து மாட்டுக் கொட்டிலையடைந்து, கபிலே நந்தே நம, ''கபிலே பத்திரே நம, கபிலே சுசீலே நம, கபிலே சுமநசே நம'', என்று பூசித்து, கைப்பிடி உணவை ஊட்டுக.

## போசனம்

யாவர்க்குமாம் இறைவர்க்கொரு பச்சிலை என்ற பிரகாரம் இறைவனை வணங்கியபின், யாவர்க்குமாம் பசுவுக்கொரு வாயுறை என்ற பிரகாரம் ஒரு கைப்பிடி உணவு கொடுத்தபின், கையலம்பி உணவு கொள்க.

திருச்சிற்றம்பலம்

அன்னம் பாலிக்குந் தில்லைச்சிற் றம்பலம்
பொன்னம் பாலிக்கு மேலுமிப் பூமிசை
என்னம் பாலிக்கு மாறுகண் டின்புற
இன்னம் பாலிக்கு மோவிப் பிறவியே.

திருச்சிற்றம்பலம்

இத் தேவாரத்தை ஓதி, அஸ்திராயபட் என்று உணவின் மேல் நீர் தெளித்து, ''சிவகுருப்பியோ நைவேத்தியம் சுவாகா'' என்று சிவபெருமானுக்கும் குருவுக்கும் நிவேதனஞ் செய்து, எஞ்சிய நீரை ''அமிர்தோபஸ்தரணமசி'' என்று ஆசமனஞ் செய்து, சிவமூல மந்திரத்தைச் சிந்தை செய்து உண்க.

★ சுபம் ★




மில்க்வைற் தயாரிப்புகளின் மேலுறைகள் காசுத்தாள்கள் போல் பெறுமதிவாய்ந்தவை. அவற்றைச் சேகரித்துப் பெறுமதிவாய்ந்த பொருள்களை வெகுமதியாகப் பெறுங்கள்.

★ பெரிய கட்டில் விரிப்பு
★ அழகிய துவாய்
★ அழகிய பொலித்தீன் பை
★ காந்திப் படமுள்ள கதர் பை
★ காந்தியின் சிலை
★ பாரதியாரின் சிலை
★ அறிவு நூல்கள்
★ நீதி நூற்கொத்து
★ ஆத்திசூடி ஆங்கில உரை
★ கொன்றைவேந்தன் ஆங்கில உரை
★ சுவாமிப் படங்கள்
★ நால்வர் படங்கள்
★ பெரியவர்களின் படங்கள்
★ அப்பியாசக் கொப்பி
★ நீதிக் குரங்குப் பொம்மை
★ பனையோலைத் தொப்பி
★ யோகாசனப் புத்தகமும் விளக்கப்படமும்

மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்
த. பெ. இல. 77, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23233


சாந்தி அச்சகம், யாழ்ப்பாணம். போன்: 23002